# திராவிட இயக்கமும், தமிழ்நாட்டில் அஞ்சல் தொலைதொடர்புத் தொழிற்சங்க இயக்கமும்



ஆ.செல்லப்பாண்டியன்

**கட்டுரைச் சுருக்கம்:**

உலகத் தொழிற் புரட்சி ஏற்பட்ட பின், இந்தியத் தொழிற்சங்க வரலாறும், குறிப்பாகத் தமிழ்நாட்டில் அதன் வரலாறும், அதில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பும், அதிலும் குறிப்பாகத் தொமுச என்னும் தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரலாறும் என்று பல கோணங்களில் விரிவாக ஆய்கிறது இக் கட்டுரை.

"காண்ப தெல்லாம் தொழிலாளி செய்தான்! அவன்

காணத் தகுந்தது வறுமையாம்

பூணத் தகுந்தது பொறுமையாம் " (1)

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், இன்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன்னால். உழைக்கும் மக்களின் வாழ்வியல் நிலையை, அவர்களின் அவலத்தைக் கவிதை வரிகளால் வடித்துத் தந்தவை தான் இவை.

தற்போது அறிவியல் தொழில் நுட்பத்தின் உச்சமான அனைத்து வகை படைப்புகளையும் மனித சமூகம் நுகர்ந்து அனுபவித்துக்கொண்டிருக்கிறது, இவை மனிதகுலத்திற்கு உழைக்கும் மக்கள் படைத்தளித்த சாதனங்கள்.அவர்கள் வழங்கிய ,வாழ்வியலுக்கான சீதனங்கள்.

மிக வேகமான 'அறிவியல் தளத்தில்' தினம் தினம் புதிய புதிய கண்டுபிடிப்புகள் அணி வகுத்து நிற்கின்றன. நீராவி இயந்திரம் தொடங்கி அணு மின்சாதனங்கள் வரை, சந்திரனில் மனிதன் கால் வைத்தது முதல் தற்போது செவ்வாய்க் கோளில் ஆய்வு நடத்தும் 'மங்கள் யான்' விண்கலம் அனுப்பியதுவரை தகவல் தொழில் நுட்பத்தில் எண்ம(டிஜிட்டல்)முறை வரை மிக நீண்ட பட்டியல் உலகலாவிய மனித குலத்திற்கு சாதனைகளாக மனித குலத்திற்கான வாழ்வியல் சாதனங்களாக வழங்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் உழைக்கும் மக்களின் வியர்வையில் விளைந்தவை!

அணுவைப் பிளந்து அதன் ஆற்றல் உணர்ந்து அந்த விண்ணை அளந்து அதன் அறிவியல் தெரிந்து,இந்த மண்ணைப் பிளந்து,அதில் கனிமம் அகழ்ந்து,கடும் மலையைக் குடைந்து அதில் வழியை வகுத்து,பெரும் கடல் நீளம் அளந்து,அதன் ஆய்வில் தெளிந்து கடலின் மடியில் நெடிய பாலம் அமைத்து இன்னும் வார்த்தைகளில் அடங்காத சாதனைகளை உழைக்கும் மக்கள் இந்த உலகிற்கு வழங்கி உள்ளனர்.

இன்னும் கடல் வழிப்பாதை,வான்வழிப்பாதை,தொலைத்தொடர்பு தகவல் தொழில் நுட்பம்,இயற்கை சீற்றங்களை

எதிர்கொள்ளும் பேராற்றல் என எண்ணற்ற சாதனைகள் .இவை எல்லாம் தொழிலாளர் உழைப்பால்தான் உயர்ந்து நிற்கின்றன. ஆனால் உலகில் பெரும்பகுதியாக உள்ள உழைக்கும் மக்களின் வாழ்வாதாரம்(*Living Standard*) கேள்விக்குறியாக பின் தங்கியே உள்ளது.அவர்களின் வாழ்க்கைப் பயணம் தொடர் போராட்டமாகவே நகர்ந்து கொண்டிருக்கிறது.

**உழைக்கும் மக்களின் அர்ப்பணிப்பு:**

உலக அளவில் இத்தகைய பெரும்பகுதி உழைக்கும் மக்கள் தாங்கள் அமைப்பு ரீதியாக செயல்பட முடியாதவர்களாக ,செயல்பட இயலாதவர்களாக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தினக்கூலி தொழிலாளியாக ,ஒப்பந்த தொழிலாளர்களாக,மலையகத் தோட்டத் தொழிலாளர்களாக ,பண்ணைத்தொழிலாளர்களாக ,பரந்து பட்ட விவசாயத் தொழிலாளர்களாக ,சிறு குறு நிறுவனத்தொழிலாளர்களாக ,நெசவு,மீன் பிடித்தொழிலாளர்களாக மிகப்பெரும்பான்மையாக உள்ள கட்டுமானத்தொழிலாளர்களாக தினம் வியர்வை சிந்தி தங்கள் உழைப்பை இந்த சமூகத்திற்காக அர்ப்பணித்துக்கொண்டிருக் கிறார்கள்.

வளரும் நாடுகளில் மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளிலும் இதுதான் எதார்த்த நிலை.ஐக்கிய நாடுகள் சபையின் உலக நாடுகள் வறுமை ஆய்வு அறிக்கை(ஜனவரி-20,2020) இதை உறுதி செய்துள்ளது.(2)

இத்தகைய உழைக்கும் மக்கள் நகர்ப்புறங்களில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் குடிசைகளில்(*Slum Area*) வாழ்கிறார்கள். அவர்கள் சுகாதாரம்,கல்வி,மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி ,ஏழ்மையிலும் வறுமையிலும் வாடுகிறார்கள்.அதேபோல உலகில் உள்ள நகர்ப்புற மக்கள் தொகையைப் போல ஏழு மடங்கு மக்கள் (சுமார் 650 கோடிப்பேர்) கிராமங்களில் வாழ்கிறார்கள்.கிராமப்புற மக்களின் ஒரு பகுதியினர் சுத்தமான குடி நீர் கூட கிடைக்காமல் அவலத்தில் வாழ்கிறார்கள் என்று விவரிக்கிறது அந்த அறிக்கை.

இன்றைய சூழலே இப்படி என்றால் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (*ILO*) போன்ற நிறுவனங்கள் வருவதற்கு முன்னால் உலக நாடுகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பு ,சட்டங்கள் ஏதும் இல்லாத 18,19ஆம் நூற்றாண்டுகளில் தொழிலாளர்களின் நிலைமை மிக மோசமாக இருந்தது.

**தொழிற்புரட்சியும் தொழிலாளர்களும்:**

புதிய தொழில் நுட்பம்,புதிய புதிய கண்டுபிடிப்புகள் தொழில்களில் முழு அளவில் இயந்திரமயமாக்கல் ஆகியவை நடந்தேறின.விளைவு உற்பத்தி பெருக்கம் அதுவும் அதிவேகத்தில் குவிந்தது.இவற்றின் காரணமாக பெரிய அளவில் பொருளாதார வளர்ச்சியை அந்த நாடுகள் அடைந்தன. மேலும் சமூகப்பண்பாட்டுத்தளங்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன.புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்ட அதே சூழலில் அவற்றில் பணி புரியும் தொழிலாளர்கள் புதிய சிக்கல்களையும் புதிய பிரச்சனைகளையும் எதிர்கொண்டனர். தொழிற்சாலைகளில் நிர்வாகம் முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் என்கின்ற அமைப்பு தானாகவே கட்டமைக்கும் சூழல் ஏற்பட்டது.

தொழிற்சாலைகளில் நீண்ட வேலை நேரம் குறைந்த அளவில் வழங்கப்படும் கூலி,வேலை உத்திரவாதம் இல்லை,பாதுகாப்பு-சுகாதாரம் இல்லை,மிகக் குறைந்த கூலியில் குழந்தைத் தொழிலாளர்கள்,சுரண்டப்படுதல்,வறுமை ,ஏழ்மை என அடுக்கடுக்காக துயரங்களைத் தொழிலாளர்கள் எதிர்கொண்டனர்.ஆனால் இவர்கள் உழைப்பில் உருவான பொருட்கள் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு பெரும் செல்வத்தை ஈட்டித்தந்தன. அதே நேரத்தில் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரும் அளவில் பாதிக்கப்பட்டன. அவர்கள் தொடர் துயரங்களைச்சந்தித்தனர். இத்தகைய சிக்கல்கள்,பிரச்சனைகள்

நிறைந்த காலகட்டத்தில் அவற்றிற்கு தீர்வுகாண புதிய சிந்தனைகளும் மாற்றங்களுக்கான முயற்சிகளும்,தீர்வுக்கான அமைப்புகளும் ,இயக்கங்களும் இயல்பாக உருவாகத்தொடங்கின.

உலக நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் தொழிற்புரட்சி துவங்கிய காலகட்டத்திலும் அதற்கு முன்னரும்கூட தொழிலாளர்கள் தங்களுக்கான தொழிற்சங்கங்களை அமைத்துக் கொள்வதற்கு முன்பாகவே ஆங்காங்கே சிறுசிறு குழுக்களாக தங்களுக்கான உரிமைகளுக்காக கோரிக்கைகளை முன்வைத்து போராடிக்கொண்டிருந்தனர்.

தொழிற்கூடங்களிலும் பணிபுரியும் இடங்களிலும் தொழிலாளர்கள் தொடர்ந்து சந்தித்த பிரச்சனைகள் பணியில் ஏற்பட்ட இன்னல்கள் தொடர்ந்து அதிகரித்து வந்தன.அதன் தீவிரத்தன்மை அவர்கள் ஒன்றுபடுவதை கட்டாயப்படுத்தியது. தொழிலாளர்களின் ஒற்றுமையை வலுப்படுத்தி போராட்டங்கள் நடத்தவேண்டிய தேவையை,அவசியத்தை உணர்த்தியது.அதன் விளைவாக இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் ,அமெரிக்காவிலும் புதிய அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் உருவெடுத்தன.

**இங்கிலாந்தில்..**

18-ஆம் நூற்றாண்டில் துவக்கத்தில் இங்கிலாந்தில் நார்விச்(Norwich) பகுதியில் உள்ள சுரங்கத் தொழிலாளர்கள்,தங்களது நியாயமான கோரிக்கைகளுக்காக தொடர்ந்து பல கட்டங்களாக ,பல ஆண்டுகள் வேலை நிறுத்தம் செய்தனர்.நாட்டிங்காம் பகுதியில் நெசவுத்தொழிலாளர்கள் போராட்டம்,1819-ஆம் ஆண்டு அனைத்து அமைப்புகள் சார்பில் பீட்டர்லூ பகுதியில் 80 ஆயிரம் பேர் கலந்துகொண்ட போராட்டம் கலவரத்தில் முடிந்தது.18 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.1833 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நாடாளுமன்றம்(Factory Act 1838) தொழிலாளர் உரிமைகள் சட்டம் கொண்டு வந்தது.ஆனால் 1834-ஆம் ஆண்டில் பண்ணை தொழிலாளர்களுக்கு ஆதரவாக கூலி உயர்வு கேட்ட 'டோல்படுள் 'பகுதி தொழிற்சங்கத்தினர் 6 பேரை ஏழாண்டுகள் தண்டனை விதித்து ஆஸ்திரேலியாவின் குற்றவாளிகள் காலனிக்கு (Penal Colony) நாடு கடத்தினர்..அரசாங்கத்தின் இத்தகைய செயலுக்கு தொழிலாளர்கள்,பொதுமக்கள் மத்தியில் நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பியது.

1842-ல் பருத்தி பஞ்சு(Cotton Workers) ஆலைத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் செய்தனர்.1867-ல் தொழிற்சங்க காங்கிரஸ் (Trade Union Congress) உருவானது.1871-ல் தொழிலாளர்களுக்கான (Trade Union Act 1871) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இங்கிலாந்தின் தொழிலாளர் அமைப்பான தொழிற்சங்க காங்கிரஸ் பின்னாளில் அரசியல் கட்சியாக இணைந்து செயல்பட்டது.1900-ல் லேபர் பார்ட்டி(Labour Party) என்னும் கட்சியாக உருவெடுத்தது.

ஜேம்ஸ் கேயர் ஹாடி(James Keir Kardie) தன் 10 வயதில் நிலக்கரி சுரங்கத் தொழிலாளியாக தனது பணியைத் துவங்கி தனது 23-வது வயதில் சுரங்கத் தொழிலாளர் சங்கத்(1879) தலைவரானார். ஸ்காட்லாந்தின் தொழிற்சங்கவாதியான ஜேம்ஸ் கேயர் ஹாடி பின்னாளில் லேபர் பார்ட்டி துவங்கியவர்களில் ஒருவராக ,அவர் அக்கட்சியின் முதல் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

**சுவீடன் நாட்டில்:**

சுவீடன் நாட்டில் ஏற்கனவே இயங்கிவந்த பல்வேறு தொழிலாளர் அமைப்புகள் ,தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து 1886 முதல் தேசிய தொழிலாளர் சங்கம்(National Labour Union) உதயமானது.பின்னர் 1898-ல் தொழிலாளர் மத்திய அமைப்பாக (Swedish Social Democratic Confederation) L.O. உருவானது. அதற்கு இணையாக தொழிற்சங்க அமைப்புடன் தொடர்புடைய (Swedish Social Democratic Party) SAP 1889-ல் துவங்கப்பட்டது. இந்த இரு அமைப்புகளும் தொழிலாளர் இயக்கம் மற்றும் அரசியலிலலும் ஆதிக்கம் செலுத்தின.

#### சுவிட்சர்லாந்து...

சுவிட்சர்லாந்து நாடு தொழில்மயமானதை(Industralation) அடுத்து 1860 களில் தொழிற்சங்க அமைப்புகள் துவங்கப்பட்டன.1873-ல் பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து தொழிலாளர் கூட்டமைப்பை(Workers Federation) உருவாக்கினர்.

#### ஆஸ்திரேலியாவில்...

அன்றைய பிரிட்டிஷ் காலனி ஆதிக்க நாடான ஆஸ்திரேலியாவில் 1820களில் (தண்டனைக் கைதிகள் அல்லாத) தொழிலாளர்களால் தொழிற்சங்க அமைப்புகள் துவங்கப்பட்டன. முதலில் சிட்னி மற்றும் ஹோபர்க் நகரங்களிலும் பின்னர் நாடு முழுவதும் துவங்கப்பட்டன.1850-களில் 400 சங்கங்கள் துவங்கி செயல்பட்டன.அப்போதே ஆஸ்திரேலியாவில் சுரங்கத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலதுறை தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடத்தினர்.குறிப்பாக பெண்கள் தீவிரமாக தொழிற்சங்கங்களில் ஈடுபட்டனர்.

#### ஜெர்மனியில்...

ஜெர்மனியில் நடைபெற்ற ஜெர்மன் புரட்சி(1848-49) காலத்தையொட்டி பெர்லின் உள்ளிட்ட 40 நகரங்களில் ஏற்கனவே தனித்தனியாக செயல்பட்டு வந்த எட்டு தொழிலாளர் சங்கங்கள் ஒன்றிணைந்து ஜெர்மன்தொழிற்சங்க பேரமைப்பாக(German Trade Union Confederation) உருவானது.

#### அமெரிக்காவில்...

ஐரோப்பிய காலனி ஆதிக்க நாடுகளிலிருந்து விடுபட்ட அமெரிக்கா சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்ட 1776-ம் ஆண்டு காலகட்டத்தில் தொழிலாளர் இயக்கங்களும் தோன்றிடத் துவங்கின. முன்னதாகவே நியூயார்க் நகரில் ,தங்களது ஊதியக் குறைப்பை எதிர்த்து தையல் தொழிலாளர்கள் 1768-ஆம் ஆண்டு போராட்டம்,வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்பது பதிவாகியுள்ளது.

1794-ல்பிலடெல்பியாவில்துவங்கப்பட்ட (Federal Society Of Journeymen Cordwainers(Shoe makers) என்னும் தொழிலாளர் அமைப்புதான் ,அமெரிக்க வரலாற்றில் நிலையான தொழிற்சங்கங்கள் தோன்றுவதற்கு முன்னோடியாக வழிகாட்டியது. தொடர்ந்து சங்கங்கள் நகர்ப்புறங்களில் விரிவடைந்தன. தொழிற்புரட்சியின் தாக்கமாக, தொழிலாளர்களிடையே தங்களுடைய வேலைத்தன்மை ,வேலைக்கான ஊதியம் பற்றிய சிந்தனை விழிப்புணர்வு ஏற்படத் துவங்கியது.தாங்கள் சுரண்டப்படுவதை உணர்ந்து வேலை நேரக் குறைப்பு போன்ற கோரிக்கைகள் தொழிலாளர்கள் மத்தியில் வலுவடையத் துவங்கியது.இத்தகைய சூழல்,விழிப்புணர்வு ஆகியவை தொழிற்சங்கக் கட்டமைப்பை விரிவுபடுத்துவது, வலிமைப்படுத்துவது பற்றிய நிலையை உருவாக்கின.

இதனையடுத்து 1827-ல் இயந்திர தொழிலாளர்(Mechanics') பொறிச்செம்மையாளர்கள் சங்கம் உருவாக்கப்பட்டு மத்திய சங்க அமைப்புகளை பிலிடெல்வியாவில் கட்டமைத்தனர்.

1852-ல் அமெரிக்கா மற்றும் கனடாவில் அச்சுக்கலை தொழிலாளர்களின் சங்கம் விரிவடைந்து சர்வதேச அமைப்பாக மாறியது.

19-ஆம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாக ,1866-ல் தேசிய சங்கங்கள் ஒன்றிணைந்தன.மற்றொன்று 1880-ல் (Knights of Labour) தேசிய அமைப்பாக வலுவடைந்தது.ஏற்கனவே 1877-ல் ரயில்வே நிறுவனங்களுக்கு எதிரான மாபெரும் வேலை நிறுத்தத்தில் முக்கிய பங்கெடுத்து வழி நடத்தியது.

தேசிய சங்களிலிருந்த ஒரு பகுதியினர் 1886-ல் அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம்(American Federation Of Labor) என்ற புதிய அமைப்பை உருவாக்கினர்.

Knights அமைப்பு விரிவாக வளர்ச்சி அடைந்த நிலையில் 1881-ல் பெண்

தொழிலாளர்களையும் அமைப்பில் சேர அனுமதித்து,அவர்களுக்கும் இயக்கத்தில் சம உரிமை அளித்தது.1884-ல் பசிபிக் ரயில்பாதை தொழிலாளர்களுக்கு 10% ஊதிய உயர்வை பெற்றுத்தந்தது.கடுமையான போராட்டத்தால் 'நைட்ஸ்' இதனைச் சாதித்தது.

**சிக்காகோ போராட்டம்.**

அமெரிக்காவின்சிக்காகோநகரில்1886-மே 4-ம் நாள் தொடங்கிய தொழிலாளர் பேரணி 'ஹே மார்க்கெட் ' சதுக்கத்தில் குருதி சிந்திய வரலாறு எனப் பதிவாகியது.அமெரிக்காவின் பள்ளி வரலாற்றுப் பாடத்தில் சிலர் மட்டுமே உண்மை நிகழ்வை பதிவு செய்துள்ளனர். A F L அமெரிக்க தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர்,தோழமைச்சங்கங்கள் இணைந்து விடுத்த அறைகூவல் ,' எட்டு மணி வேலை நேர' கோரிக்கைகளுக்காக நாடு தழுவிய போராட்டம்.

மே 1 தொடங்கியது. அன்று மிக்சிகன் அவென்யூவில் 80,000 தொழிலாளர்கள் பங்கேற்றனர்.இரண்டாம் நாள் 35000 தொழிலாளர்கள் பங்கேற்றனர்.மே-3 பெஸ்டர்ன்-புளு அவென்வியூவில் திரண்ட தொழிலாளர்கள் மீது சிக்காகோ காவல்துறை கண்மூடித்தனமான கொலைவெறித்தாக்குதல் நடத்தியது.பலர் கொல்லப்பட்டனர்.இதைக் கண்டித்து மே-4ஆம் நாள் பேரணி ஹே மார்க்கெட் சதுக்கத்தில் நடந்தபோது 2500 பேர் கலந்து கொண்டனர்.அவர்களைச்சுற்றி வளைத்து காவல்துறை தாக்கியது.பலர் கொல்லப்பட்டனர். பொய்க்குற்றம் சுமத்தி நான்கு தொழிற்சங்கத்தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

அவர்கள் தியாகம் அனைவருக்கும் '8 மணி நேர வேலை ' என்ற முழக்கம் வெற்றியைத் தேடித்தந்திருக்கிறது. அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் உலகம் முழுவதும் மே முதல் நாளை தொழிலாளர் தினமாக கொண்டாடுகிறார்கள். தியாகத்தால் உயிர் நீத்த தொழிலாளர்களின் முன்னோடிகளுக்கு சிக்காகோ நகரின் புற நகர்ப்பகுதியிலுள்ள Forest (Park Illunois) பூங்காவில் நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவில் தொழிலாளர் இயக்கம்:**

18-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் உருவான தொழிற்புரட்சியினையொட்டி இந்தியாவிலும் பஞ்சு நூற்பாலைகள் ,சணல் தொழிற்சாலைகள் முதலியவை துவங்கப்பட்டன.புதிதாக இரயில்பாதை அமைக்கும் பணியும் துவங்கப்பட்டது. இவை பிரிட்டிஷ் இந்தியாவில் 1850களில் துவங்கப்பட்ட முக்கிய பணிகள்.

எனவே 1860களில் தொழிலாளர் பிரச்சனைகளும் உருவாகத் தொடங்கின. வலுவான அமைப்பு ரீதியான தொழிற்சங்கம் இல்லாத சூழலிலும் 1875-ல் பம்பாய் நகரத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்கள்,எஸ். எஸ்,பென்காளீ என்பவர் தலைமையில் போராட்டம் நடத்தினர்.அத்தகைய போராட்டங்களின் விளைவாக அன்றைய பிரிட்டிஷ் அரசு தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க தொழிற்சாலைகள் ஆணையம்(Factory Commission) ஒன்றை அமைத்தது.

பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு எம்.என்.லோகாந்தே என்பவர் தலைமையேற்று போராட்டத்தை நடத்தினார்.அதன்விளைவாக பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஆலைத் தொழிலாளர்கள் கோரிக்கைகள் உள்ளிட்ட பிரச்சனைகளின் தீர்வுக்கு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் முதல் தொழிற்சாலைகள் சட்டம்(Factory Act 1881) கொண்டு வரப்பட்டது.

ஆயினும் அன்றைய காலகட்டத்தில் தொழிலாளர்களின் (Welfare) சேம நலன்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட்டது.அவர்களின் அடிப்படை உரிமை, கோரிக்கைகள், வேலை நேரம் போன்றவை கவனத்தில் கொள்ளப்படவில்லை.தொழிலாளர்களிடம் போதிய விழிப்புணர்வு,அறிவார்ந்த செயல்திட்டம் எதுவும் இல்லாத சூழல் தொடர்ந்தது.இந்தியாவில்

*ஆங்காங்கே தொழிலாளர் அமைப்புகள் செயல்பட்டாலும் ,வலுவான அமைப்புரீதியான தொழிற்சங்கங்கள் பிறகாலத்தில்தான் உருவாக்கப்பட்டன.*

**பிரிட்டிஷ் இந்தியாவில் ,தொழிலாளர் இயக்கம்:**

*தொழிற்சங்கங்களின் வரலாற்றில் 1918-1924 காலகட்டத்தில்தான் முறையான, வலுவான, அமைப்புரீதியான , ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்சங்கத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.*

*முதல் உலகப்போரினால் ஏற்பட்ட பாதிப்புகளின் தாக்கத்தால் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் சிதைந்து போயிருந்த சூழல் ஒரு புறம்,தொழில்மயமாக உலக அளவில் ஏற்பட்டுள்ள அறிவியல் தொழில் நுட்பங்கள் பற்றிய தெளிவு,போதிய விழிப்புணர்வு ஆகியவை இல்லாத சூழல் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டது. எனவே இத்தகைய விழிப்புணர்வு மற்றும் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவை ,அவர்களின் உரிமை பற்றிய புரிதல் ஆகியவை பற்றிய தெளிவையும் மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவைகளை உணர்ந்த தலைவர்கள் தொழிலாளர்களின் துயரங்களை களையவும்,அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தொழிலாளர் இயக்கங்களை கட்டமைக்க முன்வந்தனர்.அமைப்பு ரீதியாக சங்கங்களை உருவாக்கினர்.*

**இந்தியாவில் முதல் தொழிற்சங்கம்:**

*அன்றைய (சென்னை) மெட்ராஸ் பிரசிடென்சி(MADRAS Presidency) யில் திரு. வி.கல்யாணசுந்தரம், பி.பி.வாடியா, மா. சிங்காரவேலர் மற்றும் சக்கரைச்செட்டியார் ஆகியோர்ஏப்ரல்-271918-ல்'மெட்ராஸ்லேபர் யூனியன்(MLU) என்ற தொழிற்சங்கத்தைத் துவக்கினர்.இந்தியாவின் வரலாற்றில் அமைப்பு ரீதியாக துவங்கப்பட்ட முதல் தொழிற்சங்கம் மெட்ராஸ் லேபர் யூனியன் என்பதுதான் சிறப்பு.இதனை அடுத்து அகமதாபாத் பஞ்சாலை(Textile) தொழிலாளர் சங்கம்,அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கம் ஆகியவைகளும் துவங்கப்பட்டன.*

**(பி&சி) பின்னி மில் போராட்டம்:**

*அன்றைய மதராஸ் பின்னி (பி&சி) மில் தொழிலாளர்களுக்கு கடும் அநீதி இழைக்கப்பட்டு வந்தது.தொழிலாளர்கள் உரிமை மறுக்கப்பட்டது.12 மணி நேரம்,16 மணி நேரம் வேலை வாங்கப்பட்டு சுரண்டப்பட்டனர்.நியாயமான ஊதியம் மறுக்கப்பட்டது.எனவே இத்தகைய கொடுமைகளை எதிர்த்து பழுத்த சுயமரியாதைக்காரர் ,சங்கத்தின் தலைவர் திரு.வி.க. மற்றும் பகுத்தறிவுவாதியும் பொதுவுடமைவாதியுமான மா.சிங்காரவேலர் ஆகியோர் தலைமையில் பி&சி மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தைத் துவக்கினர்.*

*அன்றைய ஆங்கிலேயே அரசு எம்.எல். யூ.சங்கத்தை தடை செய்தது.போராட்டத்தை ஒடுக்க காவல்துறை வரவழைக்கப்பட்டது. கண்மூடித்தனமாக போராடும் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.ஒன்பது தொழிலாளர்கள் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தனர். இத்தகைய துயரச்சம்பவம் 29.8.1921-ல் நடைபெற்றது.*

*தலைவர்கள் திரு.வி.க,சிங்காரவேலர் மற்றும்சக்கரைச்செட்டியார்உள்ளிட்டோரை கைது செய்தது காவல்துறை.தலைவர் திரு.வி.க.வை நாடு கடத்த உத்தரவிட்டது நீதிமன்றம்.*

*ஆங்கிலேயே அரசின் அடக்குமுறையை எதிர்த்து எம்.எல்.யூ. சங்கம் நீதிமன்றம் சென்று போராடியது.இறுதியில் வெற்றியும் பெற்றது.இதன் தாக்கம் நாடு முழுவதும் எதிரொலித்தது. திரு.வி.க, மற்றும் மா.சிங்காரவேலர் தலைமையில் மேலும் பல சங்கங்கள் மதராஸில் துவங்கப்பட்டது.எம்.எஸ்.எம். தொழிலாளர் சங்கம்,மின்சாரத்தொழிலாளர் சங்கம்,டிராம்வே தொழிலாளர் சங்கம்,அச்சகத் தொழிலாளர்சங்கம்,ரயில்வே தொழிலாளர் சங்கம்,கோவையிலும்*

மதுரையிலும் நெசவுத் தொழிலாளர் சங்கங்களையும் உருவாக்கினர்.

**திராவிட இயக்கமும் தொழிலாளர்களும்:**

முதன்முதலில் தமிழ் நாட்டில் 1933-ஆம் ஆண்டு மே-21-ஆம் நாள் தமிழ் நாடு முழுவதும் மேதினம் கொண்டாடப்பட்டது," 1933-ஆம் வருடம் மே மாதம் 21-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ,சுயமரியாதையோரால் 'மே தினம் ' தமிழ் நாடு முழுமையும் கொண்டாடப்படும்...அன்று காலையிலும் மாலையிலும் அந்தந்தக் கிராமங்களிலும் ,பட்டணங்களிலும் சமதர்மிகள் ஊர்வலம்,சமதர்ம சங்கீதங்களுடன் வரலாம்; ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி சமதர்மம் இன்னதென்றும், தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் விளக்கமுறச்செய்யலாம்; துர்ப்பழக்கங்களை ஒழிக்குமாறு பல தீர்மானங்களை செய்யலாம். இவ்விதமாக ஒழுங்காகவும்,நியாய முறைப்படி கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கோள்கிறேன்." (3) என்று தந்தை பெரியார் அறிக்கை விடுத்தார்.

அதற்கு அடுத்த ஆண்டு முதல் மே 1-ஆம் நாள் மே தினத்தைக் கொண்டாடினார்கள். நீதிக்கட்சியும் அதற்குப் பின் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக்கழகமும் மே தினத்தை கொண்டாடி வந்தனர். இப்போதும் கொண்டாடி வருகின்றனர்,

நீதிக்கட்சிகாலத்தில்அதன்தலைவர்களில் ஒருவரான திரு டி.எம். நாயர் அவர்கள் ,அன்றைய ஆங்கிலேய அரசு கொண்டு வந்த தொழிற்சாலைகள் சட்டம்(Factory Act) பற்றி ஒரு அறிக்கையினை வெளியிட்டார். அதில் " ஒரு தொழிற்சாலை பற்றிய சட்டம் என்பது தொழிலாளி-முதலாளிக்கு இடையேயான உறவு,தொழிலாளர் நலம்,தொழிலாளர்களின் கூலி நிர்ணயம் என்கிற மட்டில் இருந்து விடக்கூடாது.எது மிகமுக்கியம்என்றால்,தொழிலாளர்கள்கால காலத்துக்கும் கூலித்தொழிலாளிகளாகவே இருப்பது என்பதைத் தாண்டி - அடுத்த தலைமுறையிலாவது அவர்களின் பிள்ளைகள் மேலே வரவேண்டும். எனவே இந்த இந்தியத் தொழிற்சங்க சட்டமுன் வடிவு பற்றி வெள்ளையர் அரசாங்கம் ஒன்றைச்சேர்க்க வேண்டும். ஒவ்வொரு தொழிற்சங்கத்த்துக்கும் -ஒவ்வொரு தொழிற்பேட்டைக்குப் பக்கத்திலேயும் தொழிலாளர்களுடைய பிள்ளைகள் இலவசமாக படிப்பதற்கு ஏற்ற வகையில் பள்ளிக் கூடங்களை அரசு நிறுவ வேண்டும்`(4) என ஆங்கிலேயே அரசுக்கு 1911-ல் எழுதினார்.அதுவும் நீதிக்கட்சி தொடங்குவதற்கு முன்னதாகவே திராவிட இயக்க சிந்தனையை வெளிப்படுத்தினார்.

தொழிலாளர்கள் பற்றியும் தொழிற்சங்கங்கள் பற்றியும் ஒரு சரியான பார்வை பெரியாருக்கு இருந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை தமிழில் தந்தை பெரியார் குடி அரசில் வெளியிட்டிருக்கிறார்.

`தொழிலாளர்கள் பகுத்தறிவுவாதிகளாக ஆக வேண்டும்.கடவுள்,மதம்,சாஸ்திரம்,சம் பிரதாயம் முதலிய காரியங்களில் நம்பிக்கை இல்லாமல் இருக்கவேண்டும்.

மனிதத் தன்மையிலும் ,மானத்திலும் ,ஒழுக்கத்திலும் நம்பிக்கை இருக்கவேண்டும் `(5) என்று பெரியார் குறிப்பிடுகின்றார்.

`இந்த நாட்டில் விவசாயிகள்,தொழிலாளர்கள் அனைவரும் திராவிடர்கள்தாம்; மங்கோலியரோ, நீக்ரோக்களோ, ஆரியரோ அல்லர். திராவிடர்தான் பாட்டாளிகளாய், விவசாயிகளாய் வாழ்கிறார்கள்`(6) என்று குறிப்பிட்டவர் பெரியார்.

பொதுவாகவே தொழிற்சங்கம் என்று சொன்னால் அது பொது உடமை இயக்கத்திற்குத் தொடர்புடையது என்கின்ற எண்ணம்தான் ஒரு பகுதியினரிடம் உள்ளது. தொழிற்சங்கம்தான் பொதுவுடமைக் கட்சி-பொதுவுடமைக் கட்சிதான் தொழிற்சங்கம் என்ற கருத்தும் இந்த சமூகத்தில் அழுத்தமாகப் பதிந்திருக்கிறது.ஆனால் உண்மை வேறு.

இந்தியாவில் பொதுவுடமைக் கட்சி (Communist Party Of India) கான்பூரில்

டிசம்பர் 26-1925-ல் தொடங்கப்பட்டது. அதன் தமிழ்நாட்டின் கிளை 1934-ல்தான் துவங்கப்பட்டது.ஆனால் 1931-அக்டோபர் 4 குடியரசு இதழில் தந்தை பெரியார் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை(*Communist Manifesto*) தொடர்ந்து இரண்டு மாதம் தமிழில் வெளியிட்டார்.ஆம் திராவிடர் இயக்கம்தான் பொதுவுடமைக் கட்சியின் அறிக்கையை முதன் முதலில் வெளியிட்டது.

1931 டிசம்பரில் தந்தை பெரியார் இரஷ்யாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.தனது இரஷ்யா மற்றும் ஐரோப்பியப் பயணத்தை முடித்துக்கொண்டு டிசம்பர் 1932-ல் தாயகம் திரும்பினார்.பொதுவுடமை நாடான இரஷ்யாவுக்குச்சென்று வந்த முதல் திராவிட இயக்கத்தின் தலைவர் தந்தை பெரியார் ஆவார்.

சோவியத் இரஷ்யாவுக்கு செல்வதற்கு முன்பாகவே 1931,ஜீன் மாதம் விருதுநகரில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் டபிள்யூ. பி.அ.சௌந்திரபாண்டியனார் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய தந்தை பெரியார் , 'சமத்துவமும் சோசலிசமும்தான் ' நமது இலக்கு' எனப் பிரகடனப்படுத்தினார். எனவே பொதுவுடமைக் கருத்துகளை தமிழ் நாட்டில் விதைத்த இயக்கம் திராவிட இயக்கம்தான்.ம.சிங்காரவேலர் 1923-ல் விழாவில் மேதினக் கொடியேற்றினார். ஆனால் நாடு முழுவதும் மே தினம் கொண்டாடியது திராவிடர் இயக்கம்.

"1952ஆவது ஆண்டு, திராவிட விவசாயத் தொழிலாளர்சங்கம்என்னும்அமைப்பினைத் தந்தை பெரியார் தோற்றுவித்தார்.1952ஆம் ஆண்டுதான் சங்கத்தைப் பெரியார் தொடங்கினார் எனினும், 1946ஆம் ஆண்டு நடைபெற்ற ரயில்வே தொழிலாளர்கள் போராட்டத்தில் திராவிடர் கழகத்திற்குப் பெரும்பங்கு இருந்தது. குறிப்பாக, திருச்சிக்கு அருகில் உள்ள பொன்மலையில் நடைபெற்ற போராட்டம் திராவிடர் கழகத் தோழர்களினாலேயே முதன்மை பெற்றது."(7) என்று சுப.வீரபாண்டியன் குறிப்பிடுகின்றார்.

தந்தை பெரியாரும் திராவிட இயக்கமும் வெறுமனே தொழிலாளர்கள் பற்றி மட்டும் சிந்தித்திவையல்ல.தமிழ் நாட்டில் தொழிலாளர்களாக யார் இருக்கிறார்கள் என்பதையும் இங்கு உழைக்கும் மக்கள் யார் என்பதைப் பற்றியும் ஒரு தெளிவான பார்வை இருந்தது.

." தொழிலாளர்கள் என்று வருகின்றபோது தொழிற்சாலைகளில் இருக்கும் தொழிலாளர்களைப் பற்றி மட்டும் தந்தை பெரியாரும் திராவிட இயக்கமும் கவலைப்பட்டதில்லை. அவர்களோடு இணைத்துஜாதியின்பெயரால்ஒடுக்கப்பட்டு பிறவித்தொழிலாளர்களாக இருக்கும் அமைப்பு சாரா தொழிலாளர்களைப் பற்றியும் சிந்தித்த இயக்கம் திராவிட இயக்கம்.அவர்களுக்காகவும் இணைத்து அமைப்பு கட்டிய இயக்கம் திராவிட இயக்கம்.

**பொதுவுடமையும் அண்ணாவும்:**

உடமையாளர்கள், உழைப்பாளர்கள் என்ற நிலை மாறி ,இருவரும் ஒன்றாக வேண்டும் எனச்சிந்தித்தவர்அண்ணா. முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் 'இன்று உடமையாளர்களாக இல்லாமலிருக்கிற விவசாயக் கூலிகளுக்கெல்லாம் நிலம் கிடைக்கிற ஒரு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறபோது, அவர்களும் உடமையாளர்கள் ஆகிற காலம் வரும். உடமையாளர்கள் -உழைப்பாளர்கள் என்ற இரண்டு வர்க்க நிலை மாறும் '(8) எல்லோருக்கும் எல்லாம் என்பதே திராவிட இயக்கத்தின் தத்துவம்.அதுவே பொதுவுடமைத் தத்துவம்.

'பேரறிஞர் அண்ணா அவர்கள் சோசலிசம்-கம்யூனிசம் பற்றி தோழர் லெனின் அவர்கள் கூறியதை மேற்கோள்காட்டிப்பேசினார்.1918-ல் லெனின் அவர்களிடம் 'உங்கள் சோவியத் நாட்டைத் தொடர்ந்து அடுத்தடுத்து கம்யூனிஸ்ட் நாடுகள் அகிலத்தில் உருவாகுமா?" என ஒரு பேட்டியில் கேட்டபோது லெனின் சொன்னார். "உங்கள் கேள்வியே பிழையானது.இன்னும் ஒரு கம்யூனிஸ் நாடு கூட இந்த சோவியத்

உட்பட இந்தப் பூமியில் உருவாகவில்லை!." அப்படியென்றால் உங்கள் நாடு கம்யூனிஸ்ட் நாடு இல்லையா? என்று கேட்டபோது ,இல்லை,இது சோசலிஸ்ட் நாடு.கியூபா உட்பட இதுவரையில் ஒரு கம்யூனிஸ்ட் நாடு கூட உருவாகவில்லை.எங்களின் அடுத்த திட்டம்தான் கம்யூனிஸ்ட் நாட்டை உருவாக்குவது " என்றார்.

சோசலிச சமூகத்திற்கும் கம்யூனிச சமூகத்திற்கும் ஒரு எளிய வேறுபாடு உண்டு ,'சக்திக்கேற்ற உழைப்பு,உழைப்புக்கு ஏற்ற ஊதியம் ' என்பது சோசலிசம், பொதுவுடமை இல்லை. 'சக்திக்கேற்ற உழைப்பு,தேவைக்கேற்ப ஊதியம்' என்பது கம்யூனிசம்.நாங்கள் இன்னும் அந்த இடத்துக்குப் போகவில்லை.எங்கள் மக்களும் அதற்கு பக்குவப்படவில்லை என லெனின் கூறினார்,'

அத்தகைய பொதுவுடமை சித்தாந்தைத்தான் பேரறிஞர் அண்ணாவும் தனது நோக்கமாக,இலட்சியமாக அறிவித்தார்.

இந்திய நாடு விடுதலை பெற்றபின் பொதுவுடமைக்கட்சி தடை செய்யப்பட்டது. மிகப்பெரிய நெருக்கடி அவர்களுக்கு ஏற்பட்டது.1949 முதல் 1951வரை தடை இருந்த காலத்தில் முன்னனித் தலைவர்கள் தலைமறைவாக இருந்தனர்.அப்படி தலைமறைவாக இருந்த பொதுவுடமைத் தலைவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரவு கொடுத்தவர்கள் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் திராவிட இயக்கமும்தான்.

1952-ல் தந்தை பெரியார் திராவிட விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தை துவங்கி வைத்தார்.அப்போது "தொழிலாளர்கள் வெளி ஆட்களைத் தலைவராக வைக்கக் கூடாது.தலைவர்கள் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து வரவேண்டும் ' என்றார். மேலும் " கூலி உயர்வுக்காக மட்டுமே போராடுகிற சங்கமாக இருக்கக்கூடாது.நம்முடைய தன்மானத்துக்கும் பகுத்தறிவுக்கும் சேர்ந்து போராடுகிற,சமூகத்தை உயர்த்துகிற சங்கமாக இருக்க வேண்டும் " என்றார்.

1967,பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க.ஆட்சி அமைந்தவுடன்,முதல்வரான பேரறிஞர் அண்ணா அவர்கள் இது தொழிலாளர் நல அரசு எனப் பிரகடனம் செய்தார்.1971-ல் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் மே 1,மே தின விழாவிற்கு அரசு விடுமுறை அளித்தார். இந்தியாவிலேயே முதன் முதலில் மே தினத்தை அரசு விடுமுறையாக அறிவித்தவர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்.

### தொழிலாளர் முன்னேற்றச்சங்கப் பேரவை:

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற் சங்கங்கள், அறிஞர் அண்ணாவின் காலம்வரைத் தனித்தனியாக இயங்கி வந்தன. தமிழ் நாட்டில் திராவிட இயக்க சிந்தனை உடைய பல ஆயிரம் தொழிலாளர்கள் பல்வேறு அமைப்புகளில் ,இயக்கங்களில் செயல்பட்டு வந்தனர்.அவர்களை ஒருங்கிணைத்து ஒரே இயக்கமாக செயல்பட விரும்பிய கழகத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.1970-ல் அதற்காக ஒரு குழுவை திருவாளர்கள் மன்னை ப.நாராயணசாமி,காட்டூர் கோபால் எல்.ஜி.கிருஷ்ணன்,எஸ்.ராகவானந்தம் எம்.எல்.சி., ஜி.பராங்குசம் எம்.எல்.சி, மா.வெ. நாராயணசாமி, சு,துரைசாமி, ச.ராமச்சந்திரன், எஸ்.மஸ்தான், எம்.செல்வராஜ், பா.மாணிக்கவாசகம், அ.பாலு ஆகியோர் கொண்டதாக அமைக்கப்பட்டது.

குழு ஆய்வில் தமிழ் நாடு முழுவதும் 189 சங்கங்களில் சுமார் 121311 பேரிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டது.அதன்படி பல இலட்சம் திராவிட இயக்க சிந்தனையுடைய தொழிலாளர்நலன்காக்கஒருமையஅமைப்பு உருவாக்க வேண்டியது அவசியம் என முடிவு செய்யப்பட்டது.அதன்படி 1.5.1970,மே தினத்தில் தலைவர் கலைஞர் அவர்கள், சென்னை எழும்பூர் ஒயிட் மெமோரியல் ஹாலில் தொ.மு.ச.பேரவையை துவக்கி வைத்தார்.மன்னை நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற நிகிழ்ச்சியில்

தொ.மு.ச.கொடியினை நாவலர் நெடுஞ்செழியன் ஏற்றிவைத்தார்,

**தொ.மு.ச. பேரவையின் நிர்வாகிகள்:**

தொ.மு.ச பேரவை 1970-ல் துவங்கப்பட்டபோது அதன் முதல் தொழிலாளர் அணிச்செயலாளராக பேராசிரியர் க.அன்பழகன் அவர்களும்,நாஞ்சில்கி.மனோகரன்அவர்கள் தலைவராகவும்,காட்டூர் கோபால் அவர்கள் பொதுச்செயலாளராகவும் பொறுப்பேற்று பணியாற்றினர்.

தி.மு,கழகத்தின் தொழிலாளர் அணிச்செயலாளர் பேராசிரியரைத் தொடர்ந்து ,ஏ.கோவிந்தசாமி, ஆற்காடு நா. வீராசாமி, வி. எஸ். கோவிந்தராசன், க. சுப்பு,, மா. வெ. நாராயணசாமி, பேரூர் ஆ.நடராசன் மற்றும் சிங்கார ரத்தின சபாபதி ஆகியோர் பொறுப்பேற்று பணியாற்றினர்.

தொ.மு.ச. முதல் தலைவராக பொறுப்பேற்று நாஞ்சில் கி.மனோகரன் அவர்களைத் தொடர்ந்து ,ஜி.பராங்குசம்,இ. ஆறுமுகம், செ. குப்புசாமி, பேரூர் ஆ.நடராசன்,வே.சுப்புராமன் ஆகியோர் பேரவையின் தலைவராக பொறுப்பேற்று பணியாற்றினர்.

தொ.மு.ச.பேரவையின் முதல் பொதுச்செயலாளராக காட்டூர் கோபால் அவர்களைத் தொடர்ந்து ,க.சுப்பு, சு.துரைசாமி, வை.பெருமாள், மு.சண்முகம் ஆகியோர் பொறுப்பேற்று பணியாற்றினர். திரு.மு.சண்முகம் அவர்கள் தற்போது பொதுச்செயலாளராக பணியாற்றுகின்றார்.

தற்போது,இத்தகைய சிறப்புகளைப் பெற்ற தலைவர்களின் உழைப்பால் வளர்ந்து,பல்வேறு துறைகளில் பணியாற்றும் இலட்சக்கணக்கான தொழிலாளர் நலன்களுக்காகப் போராடி வெற்றி பெற்று அகில இந்திய அளவில் 19 மாநிலங்களில் 24,00,000 உறுப்பினர்களைப் பெற்று பேரியக்கமாக செயல்பட்டு வருகின்றது.

**சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)**

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் ஒரு முகமை(Agency)யாக ILO சர்வதேச தொழிலாளர் அமைப்பு செயல்பட்டு வருகிறது.முதல் உலகப்போர் முடிவுற்ற நிலையில் ,தொழிலாளர்களின் சமூக பொருளாதார வகையில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதியை நிலை நாட்ட ,அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட உருவாக்கப்பட்டதுதான் சர்வதேச தொழிலாளர் அமைப்பு(ILO) ஆகும்.இந்த அமைப்பு சர்வதேச உறுப்பு நாடுகளால் அக்டோபர் 1919-ல் துவங்கப்பட்டது.இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் அமைந்துள்ளது.

இதில் ,ஐக்கிய நாடுகள் அமைப்பில்(UN) இணைந்துள்ள 193 நாடுகளில் ,187 நாடுகள் ILOவில் உறுப்பினர்களாக உள்ளனர். சர்வதேச தொழிலாளர் அமைப்பு கீழ்க்கண்ட கொள்கைகளைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

சர்வதேச தொழிலாளர்களின் அளவீடுகள் பற்றிய நோக்கம், இணக்கமாக அணுகுதலை உறுதிப்படுத்துவது, உருவாக்குவது, நிலைத்த வேலை, உலக அளவிலான சுதந்திரம், சமத்துவம்,பாதுகாப்பு,கண்ணியம் காப்பாற்றப்படுவது ஆகியவை ILOவின் முதன்மைக் கோட்பாடுகளாகும்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு தொழிலாளர் நலன்,உரிமை,பாதுகாப்பு சார்ந்த 189 தீர்மானங்களை இதுவரை நிறைவேற்றி உள்ளது.அதில் எட்டுத் தீர்மானங்கள் தொழிலாளர்களின் அடிப்படை கோட்பாடுகள் உரிமை சார்ந்தவை.அதில் முதன்மையானவை இரண்டு.

ஒன்று தீர்மானம் 87.சங்கம் அமைக்கும் உரிமை (1948ல்)

இரண்டாவது தீர்மானம் 98.கூட்டு பேர சக்தியை பயன்படுத்தும் உரிமை(1949ல்)

மேற்கண்ட இரண்டு முக்கிய தீர்மானங்களை 157 நாடுகள் அங்கீகரித்துள்ளன. 1948, 1949-ல் நிறைவேற்றப்பட்ட இந்த இரு தீர்மானங்களை இந்தியா,சீனா,மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 30 நாடுகள் இதுவரை

ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்தியாவில் மத்திய சங்க அமைப்புகள்:**

இந்திய வரலாற்றில் முதலில் உருவான அமைப்பு அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ்(AITUC) லாலா லஜபதிராய் அவர்கள்தலைமையில்1920ல்பம்பாய்நகரில் துவங்கப்பட்டது.அதன் தலைவர்களாக ஜவஹர்லால் நேரு,சுபாஷ் சந்திரபோஸ்,வி.வி.கிரி. ஆகியோர் பதவி வகித்துள்ளனர். பின்னர் அமைப்பில் இடதுசாரி தலைவர்களின் ஆதிக்கம் அதிகரித்ததை அடுத்து 1947 மே-3 அன்று இந்திய தேசிய தொழிற்சங்கம்(INTUC) துவங்கப்பட்டது. ஜவஹர்லால் நேரு,ஜெகஜீவன்ராம் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

அதே போல் இந்திய தொழிற்சங்க காங்கிரஸில்(AITUC) கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆதிக்கத்தை எதிர்த்த சோசலிஸ்ட் தலைவர்கள் அதிலிருந்து விலகி 1948 டிசம்பரில் இந்து தொழிலாளர் சங்கம்(HMS)என்ற அமைப்பை கல்கத்தா நகரில் துவங்கினர்.

தொடர்ந்து AITUC-ல் இணைந்து பணியாற்றிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் இந்தியா-சீனா(1962) போர் விவகாரத்தில், கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவின் காரணமாக தொழிற்சங்கத்திலும் பிளவு ஏற்பட்டது.அதன் விளைவாக 1970-ல் இந்திய தொழிற்சங்க மையம்(CITU) துவங்கப்பட்டது.பின்னர் தீவிர இடதுசாரி சிந்தனை கொண்ட பல அமைப்புகள் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட BMS அமைப்பு தொடங்கப்பட்டது.அகில இந்திய தொழிலாளர் முன்னனி(பார்வர்ட் பிளாக்) துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

**மத்திய சங்க அரங்கில் தமிழ் நாட்டின் தலைவர்கள்:**

இருபதாம் நூற்றாண்டில் ,இந்திய தொழிற்சங்க அரங்கில் தமிழ் நாட்டைச்சேர்ந்த தலைவர்களின் பங்களிப்பு பெருமை கொள்ளத்தக்கது. பிரிட்டிஷ் இந்தியா காலந்தொட்டு தற்போதுவரை உழைப்பு,தியாகம்,சாதனை என அனைத்து தளத்திலும் அவர்கள் தங்களது தனித்த அடையாளங்களை வரலாற்று முத்திரைகளாக தடம் பதித்து சென்றுள்ளனர்.அவர்கள் தேசிய சிந்தனை கொண்ட தலைவர்கள்,இடதுசாரி பொதுவுடமை தலைவர்கள் மற்றும் சமூக நீதி ,சுயமரியாதை,பகுத்தறிவு கோட்பாடுகள் கொண்ட திராவிட இயக்க சிந்தனை கொண்டதலைவர்கள்என மூன்று வகையான நெறிகளையுடைவர்களாக இருந்தனர்.

குறிப்பாக ரயில்வே தொழிலாளர்கள் மற்றும் அஞ்சல் தந்தி தொலைபேசி தொழிலாளர்கள் மத்தியில் தமிழ் நாட்டைச்சேர்ந்த தலைவர்களின் பங்களிப்பு முதன்மையானதாகவும் பாராட்டத்தக்கதாகவும் இருந்தது. அஞ்சல் தந்தி தொலைபேசி தொழிலாளர்கள் தலைவர்களாக உருவாகிய திராவிட இயக்கத் தோழர்கள் சிலரைப் பற்றிய குறிப்புகள்...

**தலைவர் கே.ஆர்.**

அவர்களில் முதன்மையானவர் திரு. கே.ராமமூர்த்தி அவர்கள்.நெல்லை மாவட்டத்தில் பிறந்து வளர்ந்தவர் .அஞ்சல் துறையில் 1936-ல் பணியில் சேர்ந்து பணியாற்றியவர்.துவக்கம் முதலே தொழிற்சங்கத்தில் ஆர்வமுடன் பணியாற்றியவர்.மிக இளம் வயதிலேயே முதல் ஊதியக்குழுவில் IPTU சார்பில் ஊழியர் தரப்பில் 1946-ல் சாட்சியம் அளித்தார்.UPTU 1947-ல் உருவானது. அதன் துணைப்பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.பின்னர் அதன் பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.1960-ல் 5 நாள் வேலை நிறுத்தம் தொடங்கியபோது கைது செய்யப்பட்டார். கே.ஆர். மற்றும் தலைவர்களுக்கு கைகளில் விலங்கிடப்பட்டு ,கை கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நீதிமன்றம் அழைத்து வந்தனர். தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்.தொடர்ந்து NFPTE தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் ஜனநாயக முற்போக்கு

அமைப்பை உருவாக்கி ,உள்ளிருந்தே போராடினார்.1968 போராட்டத்தில் உருவான கருத்து மோதலால் 1969-ல் FNPTO எனும் புது அமைப்பை உருவாக்கி செயல்பட்டார். மத்திய அரசு ஊழியர்களின் 2-வது,3வது மற்றும் 4-வது ஊதியக்குழுவிற்கு அஞ்சல் தந்தி ஊழியர்களின் கோரிக்கைகளை முன்வைப்பதில்,அவற்றிற்காக வாதாடி வெற்றி பெறுவதில் முழுமையான பங்காற்றினார்.

அப்போதைய அமைச்சர்கள் டி.டி. கிருஷ்ணமாச்சாரி,வி.வி.கிரி மற்றும் ரஃபி அகமத் கித்வாய் ஆகியோரிடம் நேரடியாக பேச்சு வார்த்தை நடத்தி கோரிக்கைகளை வென்றிருக்கிறார். கே.ஆர். அவர்கள் தலைமையில்தான் ஓய்வு பெற்றோர் குடும்ப ஓய்வூதியம் அமலானது.ஞாயிறு வார விடுமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. ED ஊழியர்கள் கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைத்தது.பல சர்வதேச மாநாடுகளில் இந்தியாவின் பிரதி நிதியாக பங்கேற்று சிறப்பித்தவர்.

### ஏ.எஸ்.ராஜன்

தமிழகத்தை சேர்ந்த ஏ.எஸ்.ராஜன் அஞ்சல்துறை தொழிற்சங்கத்தில் பணியாற்றிய முக்கிய தலைவர்.பேரறிஞர் அண்ணாவுடன் நட்பு கொண்டவர். ஆங்கிலத்தில் சிறந்த பேச்சாற்றல் கொண்டவர்,துவக்கத்தில் தமிழ்நாடு அஞ்சல் ஊழியர் மாநிலச்செயலாளர்,பின்னர் மத்திய சங்கப்பொதுச்செயலாளர் என திறம்பட பணியாற்றியவர்.1947-ல் UPTWஅமைக்கப்பட்டபோது அதன் துணைப்பொதுச்செயலாளராகப் பணியாற்றினார்.1949-ல் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட ஐவர் குழுவில் இவரும் ஒருவர்.1971-ல் நடைபெற்ற(கல்கத்தா) சம்மேளன மாநாட்டில்NFPTEயின்பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டு திறம்பட பணியாற்றினார்.தலைவர்கள்,கே.ஆர்.,கே. ஜி.போஸ்.,ஓ.பி.குப்தா ஆகியோருடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

### கடலூர் என்.சி.அம்பலவாணன்

தமிழ் நாட்டைச்சார்ந்த என். சி.அம்பலவாணன் அஞ்சல்துறை தொழிலாளர் சங்கத்தில் பணியாற்றிய முன்னனித் தலைவர்.கடலூரைச்சேர்ந்த இவர் திராவிட இயக்க சிந்தனையாளர். அஞ்சல்துறை தொழிற்சங்கத்தில் (NFPTE) முதலில் மாநிலத்தலைவராகப் பணியாற்றி பின்னர் அஞ்சல் ஊழியர்களின் அகில இந்திய தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். நெருக்கடியான காலகட்டங்களில் இயக்கத்தை திறமையாக வழி நடத்தியவர்.

### ஜி.லெட்சுமணன்

ஜி.லெட்சுமணன் அஞ்சல்துறையில் தமிழ் நாட்டின் மாநிலச்செயலாளராகவும்,மத்திய செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.அகில இந்திய மாநாடுகளில் அஞ்சல் ஊழியர் நலன்களுக்காக வாதாடியவர்.இவர் திராவிட இயக்க நிந்தனையாளர்.தலைவர்கள் கே.ஆர்., மற்றும் கே.ஜி.போஸ் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.1974-ல் நாடாளுமன்ற மாநிலங்களவைக்கும் 1980-ல் மக்களவைக்கும் தேர்வு செய்யப்பட்டவர். மக்களவை துணைத்தலைவராகவும் தி.மு.க.சார்பில் தேர்வு செய்யப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

### ஏ.ஜி.பசுபதி

ஏ.ஜி.பசுபதி தமிழ் நாட்டின் அஞ்சல் துறையில் பணியாற்றிய முன்னனித் தலைவர்.கருப்புச்சட்டைக்கு சொந்தக்காரர். தீவிர திராவிட இயக்க சிந்தனையாளர்.மாநில அஞ்சல் தபால்காரர் சங்கத்தின்(NFPTE) செயலாளராக நீண்டகாலம் பணியாற்றியவர். பின்னர் அகில இந்திய சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் சம்மேளனக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். சம்மேளன பொதுச்செயலாளராக இருந்த ஆ.பிரேமநாதன் அவர்களுடன் இணைந்து பணியாற்றினார்.

**ஆ.பிரமநாதன்– டி.ஞானையா**

மதுரையைச்சேர்ந்த ஆ.பிரேமநாதன் அவர்களும் கோவையச்சேர்ந்த டி.ஞானையா அவர்களும் இடது சாரி சிந்தனையுள்ள தலைவர்கள்.இருவரும் .NFPTE சம்மேளனத்தின் பொதுச்செயலாளர்களாக நெருக்கடியான காலகட்டங்களில் அடுத்தடுத்து பதவியேற்று சிறப்பாக பணியாற்றியவர்கள்.அஞ்சல் ஊழியர் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்குமான பிரச்சனைகளுக்காக பல போராட்டங்களை தலைமையேற்று நடத்திய தலைவர்கள். இன்னும் அஞ்சல் துறையில் தமிழ் நாட்டின் சார்பாக தொழிற்சங்க பணியாற்றிய தலைவர்கள் நிறைய இருக்கின்றார்கள்.

**புதுவை கே.எக்ஸ்.லாரன்ஸ்**

தமிழ் நாட்டில் அஞ்சல் தந்தித் துறையில் தொழிற்சங்கத் தலைவராகப் பணியாற்றிய பல தலைவர்களில் முதன்மையானவர். புதுவையைச்சேர்ந்த கே.எக்ஸ்.லாரன்ஸ் அவர்கள் .தந்தி தொலைபேசிப்பிரிவில் பணியாற்றிய தொழிற்சங்கத் தலைவர். தமிழ் நாடு மட்டுமல்ல அகில இந்திய தலைவர்கள் பலரை உருவாக்கிய தலைவர். தந்தி தொலைபேசி ஊழியர்களின் வாழ்க்கைத்தரம் உயர கோரிக்கைகளை வடித்தெடுத்துக் கொடுத்த பிதாமகன் அவர். திராவிட இயக்க சிந்தனையாளர்.பற்றாளர்.

**எஸ்.கனகசொரூபன்**

எஸ்.கனகசொரூபன் கடலூரைச்சேர்ந்த எஸ்.கனகசொரூபன் தொலைபேசி தொழிற்சங்கப்பிரிவில் மூத்த தலைவர். தலை சிறந்த போராளி.நிர்வாகத்தின் அடக்குமுறைக்கு ஆளானவர்.வேலை நிறுத்தப்போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.நிர்வாகத்தின் பல்வேறு தண்டனைகளை ஊழியர் நலன்களுக்காக ஏற்றுக்கொண்டவர். ஊழியர்களின் அன்பைப் பெற்றவர்.அகில இந்திய அளவில் இயக்கத்தின் வழிகாட்டியாக சிறப்பாக பணியாற்றியவர்.இளைஞர்களை ஊக்குவித்து தலைவர்களை உருவாக்கியவர். பேறறிஞர் அண்ணா,தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

**ஆர்.வெங்கட்ராமன்**

ஆர்.வெங்கட்ராமன் கோயம்புத்தூரில் தொலைபேசிப்பிரிவில் பணியில் சேர்ந்த ஆர்.வெங்கட்ராமன் அவர்கள்,இளமைக் காலந்தொட்டு தொழிற்சங்கத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்.போராட்டக் குணம் நிறைந்த ஒரு போராளி.துவக்கத்தில் ஆற்றல் மிகுந்த ஒரு செயல்வீரராக தமிழ் மாநில சங்கத்தில்(FNPTO) பொறுப்பேற்றார். தொடர்ந்து அகில இந்திய தலைவராகப் பொறுப்பேற்று பணியாற்றினார்.1986 முதல் FNPO வின் சம்மேளத்தின் பொதுச்செயலாளராக 12 ஆண்டுகள் பணியாற்றினார்.

திராவிட இயக்கப்பற்றாளரான ஆர்.வெங்கட்ராமன் 1975-ல் கோவை தொலைபேசி மனமகிழ் மன்றத்திற்கு தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து கூட்டம் நடத்தினார்.தற்போது 'தொ.மு.ச.'பேரவை மத்திய சங்க அங்கீகாரம் பெறுவதற்கு உறுதுணையாக முக்கிய பங்காற்றினார்.தற்போதும் தொ.மு.ச.பேரவையின் அலுவலக செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

**வே.சுப்புராமன்**

வே.சுப்புராமன்தமிழ்நாட்டின்சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்தவர் வே.சுப்புராமன். இவர் 1965-ல் தந்தை பெரியாரின் ஈரோட்டு மண்ணில் தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்தார்.பணியில் சேர்ந்த காலந்தொட்டு தொழிற்சங்கப்பணிகளில் ஆர்வமுடன் பங்கேற்றார்.இவர் திராவிட இயக்க சிந்தனையாளர்.திரு. வே.சுப்புராமன் தேசிய சங்கத்தில் பணியாற்றியபோது, போனஸ், ஊதிய உயர்வு,பதவி கேடர் சீரமைப்பு உள்ளிட்ட தொலைத்தொடர்பு ஊழியர் கோரிக்கைகளுக்காக பல்வேறு

போராட்டங்களை,வேலை நிறுத்தங்களை முன்னின்று நடத்தினார்.4-வது ,5-வது ஊதியக்குழுவிற்கான கோரிக்கை பட்டியல் தயாரிப்பதில் மத்திய சங்கத்திற்கு உறுதுணையாக இருந்தார்.5-வது ஊதியக்குழுவில் 40% ஊதிய உயர்வு பெறுவதிலும் சென்னை நகரம் A1 தகுதி பெறவும் தலைவர் கலைஞர் ,செ.குப்புசாமி ஆகியோர் மூலம் முயற்சி மேற்கொண்டார். அதற்கு வெற்றியும் கிடைத்தது.

**பி.எஸ்.என்.எல். தொழிற்சங்கங்களும் திராவிட இயக்கமும்:**

2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒன்றிய அரசின் தொலைதொடர்புத் துறை பொதுத்துறையாக மாற்றப்பட்டது. அப்போது தொலைதொடர்பு ஊழியர் முன்னேற்ற சங்கம்(TEPU) ,தொ.மு.ச.பேரவையில் இணைந்து தொடங்கப்பட்டது.வே.சுப்புராமன் அதன் பொதுச்செயலாளராகப் பணியாற்றினார். திரு.செ.குப்புசாமி எம்.பி.அவர்கள் தலைமையில் இயக்கத்தை வழி நடத்தினார்.

2001-ல் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் ஊழியர்கள்,அதிகாரிகளுக்கு பென்சன் திட்டத்தை உறுதி செய்வதற்காக நடந்த போராட்டத்தில் தொலைதொடர்பு தொ.மு.ச.கலந்து கொண்டது.அந்த போராட்டத்தில் மறியலில் ஈடுபட்டு அதன் பொதுச்செயலாளர் வே.சுப்புராமன் உள்ளிட்டோர் கைதானார்கள். அனைவருக்கும் பென்சன் திட்டத்தை அரசு உறுதி செய்தது.

2002-ல் முதல் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையில் ஆர். வெங்கட்ராமன்,வே.சுப்புராமன் இருவரும் பங்கேற்று சிறப்பான உடன்பாட்டை ஏற்படுத்தினர்.ஊழியர்களின் போனஸ் பிரச்சனையிலும் தீர்வு கண்டனர்.1.1,.2007 இரண்டாவது ஊதிய உயர்விலும,50% IDA இணைப்பிலும் அன்றைய மத்திய அமைச்சர் ஆ.இராசாஅவர்களின்முழுஒத்துழைப்போடு பெற்றுத்தந்தனர்.ஊழியர்களுக்கு 4 பதவி உயர்வு திட்டத்தைப் பெற்றுத்தந்தனர். தொலைத்தொடர்பு பி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் சி.பி.எம்.சி.பி.ஐ.சங்கங்கள் முதன்மைச்சங்கங்களாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் ,தொ.மு.ச.ஆதரவுடன் அதன் தலைவர் திரு.செ.குப்புசாமி எம்.பி.அவர்கள் வழிகாட்டலில் ஆர்.வெங்கட்ராமன்,வே. சுப்புராமன் இருவரும் இவற்றை சாதித்துக்காட்டினர்.

**தொ.மு.ச. மத்திய சங்க அங்கீகாரம்:**

வே.சுப்புராமன் அவர்கள் பொதுச்செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் 14 மாநிலங்களில் தொலைத்தொடர்பு(TEPU) தொ.மு.ச.வைத் தொடங்கி ஆர்.வெங்கட்ராமன் அவர்களின் ஒத்துழைப்போடு நடத்தினார். அது தற்போது 19 மாநிலங்களில் விரிவடைந்துள்ளது.அதனடிப்படையில் முன்பு 5 மாநிலங்களில் செயல்பட்ட தொ.மு.ச.பேரவை தொலைத்தொடர்பு உதவியால் மத்திய சங்க அங்கீகாரத்திற்கான தகுதியைப் பெற்றது.அத்தகைய பணியில் தொ.மு.ச.பேரவைக்கான அங்கீகாரம் கிடைக்க வே.சுப்புராமன்,ஆர். வெங்கட்ராமன்,ந.சுவாமிநாதன்,ஆ. செல்லப்பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் உதவியாக இருந்தனர். திராவிட இயக்க சிந்தனைகள் தொழிற்சங்க வழியில் பரவுவதற்கு இந்த மத்திய சங்க அங்கீகாரம் பெரிதும் உதவுகிறது.தொ.மு.,ச. பேரவைத்தலைவராக வே.சுப்புராமன் அவர்கள்2017முதல்2021வரைசெயல்பட்டார். தொ.மு.ச.பேரவைத்தலைவர் என்ற நிலையில் டெல்லியில் மற்ற மத்திய சங்கத் தலைவர்களுடன் தோழமையுடன் நட்பு பாராட்டும் வாய்ப்பு அமைந்தது அவருக்கு.

**திராவிட இயக்க சிந்தனையாளர்களின் பங்களிப்பு:**

தமிழ் நாடு தொலை தொடர்பு பிரிவில் மூத்த தலைவர்கள் புதுவை திரு.கே.எக்ஸ்.லாரன்ஸ் மற்றும் கடலூர் எஸ்.கனகசொரூபன் ஆகியோர் வழிகாட்டுதலில் ஆர்.வெங்கட்ராமன் தலைமையில் மத்திய தொழிற்சங்க

அரங்கிலும் மாநில தொழிற்சங்க அரங்கிலும் பணியாற்றிய திராவிட இயக்க சிந்தனையாளர்கள்,பற்றாளர்கள் என்ற நிலையில் தங்கள் உழைப்பை அர்ப்பணித்த தலைவர்கள்

திருவாளர்கள் மா.ஆண்டியப்பன் வே.சுப்புராமன்

வா.மு.ரசூல்முகைதீன் ஐ.பி.தியாகராசன்

ஜி.என். நாகேந்திரன் இரா.மாரிமுத்து

க.வள்ளி நாயகம் ம.தங்கவேலு

ஏ.எஸ்.சையது அலி ஆ.செல்லப்பாண்டியன்

சி.இளங்கோவன்

ந.சுவாமிநாதன்

டி.தேவராசன் எம்.எஸ்.அந்தோணிசாமி

டி.சந்திரசேகரன் ஜெ.வேம்பு

என நீண்ட பட்டியல் தொடரும்.

இவர்களோடு இன்னும் பல தலைவர்களுடைய உழைப்பு,இந்த இயக்கத்திற்கு ,அதன் தொழிலாளர்களுக்கு, உழைக்கும் வர்க்கத்திற்கு பயன்பட்டது.ஐம்பது ஆண்டு கால தொழிற்சங்க வரலாற்றில் இத்தகைய தலைவர்களின் உழைப்பும் தியாகமும் தடம் பதித்தது.அழியாத இடம் பிடித்தது.

**பொதுவுடைமைக் கருத்தோட்டம் உள்ள தலைவர்கள்:**

இந்திய அஞ்சல்,தொலைதொடர்பு சங்கத்தைப் பொறுத்தளவில், அகில இந்திய தலைவர்களாக இருந்த தோழர்கள் தாதா கோஷ், ஓ. பி. குப்தா, கே. ஜி. போஸ், தோழர் ஜெகன்,தோழர்.கா.முக்தியாலு,தோழர் ஆர். கிருஷ்ணமூர்த்தி என ஒரு பெரிய பட்டியல் உண்டு.அவர்களை மட்டும் விரித்து மிக விரிவான வரலாறாக எழுத இயலும்.

**முடிவுரை:**

அஞ்சல் தந்தியின் துவக்க காலத்தில் 1940-ல் தொழிலாளர் இயக்கத்தலைவர்கள் மூத்த முன்னோடிகள் ஒற்றுமையைக் கட்டமைக்க அரும்பாடு பட்டனர்.சிதறிக் கிடந்த சங்கங்களை ஒன்றிணைத்தனர்.பல்வேறு கருத்தோட்டம் கொண்டவர்களையும் ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் ஒரே அமைப்பாக(NFPTE) கொண்டு வந்து உருக்குபோல வலிமையான கட்டமைப்பாக உருவாக்கினர்.தங்களது அயராத உழைப்பால் அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றனர். திராவிட இயக்க கருத்தியல் கொண்ட தோழர்களும்,தலைவர்களும் அமைப்புக்கு முழு ஆதரவைக் கொடுத்தனர்.

ஆனால் அத்தகைய கட்டமைப்பும் வெற்றியும் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை.1954-லேயே சூழ்ச்சியும் புறக்கணிப்பும் தலைதூக்கியது. உண்மையான உழைப்பும் ,தியாகமும் ,ஜனநாயகமும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் 1969-ல் அமைப்பில் பிளவு ஏற்பட்டு FNPTO என்ற புதிய அமைப்பு தோன்றியது.அடுத்து 1977-ல் பாரதிய சங்கம் ஜனசங்க சார்பு நிலைப்பாட்டால் BPTEF சம்மேளனம் உருவானது. ஒன்று,இரண்டு மற்றும் மூன்று சங்கங்களாக உருவெடுத்தது.2000-ஆம் ஆண்டில் பி.எஸ். என்.எல்.பொதுத்துறையாக மாறியபோது 9 சங்கங்கள் பதிவுபெற்றன.அது 2008-ல் 14 ஆக உயர்ந்தது.தற்போது 18 சங்கங்கள் களத்தில் உள்ளன.முதல்,இரண்டு சங்கங்கள் மட்டுமே அங்கீகாரம் பெற்றவையாக உள்ளன. இரண்டுமே பொதுவுடமை இயக்க ஆதரவு சங்கங்கள்.இந்தியா போன்ற நாட்டில் பல கோடி இளைஞர்கள் வேலையின்றி தவிக்கும் சூழலில் கடந்த 2019-ல் இன்றைய ஆளும் பி.ஜே.பி.அரசு 80,000 ஊழியர்களை விருப்ப ஓய்வு திட்டத்தில் வெளியேற்றியது. இரு பெரும் பொதுவுடமை சங்கங்கள் கனத்த இதயத்தோடு வழியனுப்பி வைத்தன. அனுதாப அறிக்கை மட்டுமே விடமுடிந்தது.

பிரிட்டிஷ் இந்தியாவில் 1920-ல் தொடங்கப்பட்ட முதல் தொழிலாளர் இயக்கம்,சுதந்திரமான அனைவருக்குமான அனைத்து கருத்தோட்டங்களையும் உள்ளடக்கிய உயரிய கோட்பாட்டுடன் உருவான ஏஐயூடிசி இன்றைக்கும்

இருக்கிறது.அதிலிருந்து பிரிந்து பல இயக்கங்கள் தனித்து சிதறிக்கிடக்கின்றன. விடுதலை பெற்ற இந்தியாவில் சங்கங்கள் பல்கிப் பெருகி இருப்பதுதான் கண்ட வளர்ச்சியும் முன்னேற்றமும்.தலைவர்களின் அரசியல் மேலாதிக்கம்,அவற்றின் தன்முனைப்பு ,அதிகாரம் ஆகியவை ஒட்டு மொத்த உழைக்கும் வர்க்கத்தையே கூறு போட்டு கூறு போட்டு சிதைத்து விட்டனர்.

மனித இனத்தின் மாபெரும் சிந்தனையாளர் காரல்மார்க்ஸ் அவர்கள் கூறிய இந்தியா பற்றிய கருத்துகளை இந்திய பொதுவுடமைவாதிகள் முழுமையாக செயல்படுத்த முனையவில்லை."இந்திய சமுகத்தின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பெரும் தடையாக இருப்பது இந்திய சமூகத்தில் அமைக்கப்பட்ட சாதி,மதக்கட்டமைப்பு " என விவரித்தார்,எச்சரித்தார்.

அதைத்தான் மாபெரும் பகுத்தறிவுச்சிந்தனையாளர் தந்தை பெரியார் அவர்கள் கடந்த நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே முழங்கினார்.தனது இறுதி மூச்சுவரை போராடினார்.தந்தை பெரியார் தனது சிந்தனையால் சமூக மாற்றத்திற்கான அடித்தளத்தை தமிழகத்தில் வலுவாக அமைத்துவிட்டு சென்றிருக்கிறார். ஒட்டு மொத்த பொதுத்துறையையும் தனியார்மயமாக்குவது, அதன் மூலம் இட ஒதுக்கீடு இல்லாமல் ஆக்குவது, தொழிலாளர்கள் போராடிப்பெற்ற உரிமைகளப் பறிப்பது என ஒன்றிய மத்திய அரசு தொழிலாளர்களுக்கு எதிராக பல செயல்பாடுகளைச்செய்து கொண்டிருக்கிறது.

எனவே இன்றைய சூழலில் ஒட்டு மொத்த இந்தியாவை,பாசிச மதவாத சக்திகளிடமிருந்து மீட்டெடுக்க பெரியாரிய,அம்பேத்கரிய மற்றும் இடதுசாரி பொதுவுடமைவாதிகள் ஓரணியில் திரளவேண்டியது கட்டாயம் இந்திய அளவில் தமிழ் நாடுதான் அதற்கு முன்னுதாரணம்.தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 'திராவிட மாடல்தான் 'அதற்கான எடுத்துக்காட்டு. அதற்கான களம் காத்திருக்கிறது.உழைக்கும் மக்களை மானமுள்ள சுயமரியாதைக்காரர்களாக மாற்றுவதே இலக்கு .அந்த இலக்கினை அடையும்வரை வாழ்க்கையே போர்க்களம்,வாழ்ந்துதான் பார்க்கணும்! போர்க்களம் மாறலாம்,போர்கள் மாறாது.

**உசாத்துணை:**


*1. பாரதிதாசன் பாடல்கள், முதல் தொகுதி, சாய்ந்த தராசு கவிதைத் தலைப்பு.*

*2. UN World Poverty Statistics Global Poverty Report 20 Jan 2020 Para 1& Para 6*

*3. தந்தை பெரியார் 'குடி அரசு 'அறிக்கை- 14-5-1933*

*4. சுப.வீரபாண்டியன், திராவிடர் இயக்கமும் தொழிற்சங்கமும்.*

*5. தந்தை பெரியார், விடுதலை, 9.5.1961*

*6. தந்தை பெரியார், விடுதல, 8.10.1953*

*7. சுப.வீரபாண்டியன், திராவிடர் இயக்கமும் தொழிற்சங்கமும்.*

*8. மாபெரும் தமிழ்க்கனவு, தி இந்து தமிழின், தமிழ்திசை நூல், பக்கம் 413*


**ஆசிரியர் குறிப்பு:**


*ஆ.செல்லப்பாண்டியன், இவர் மதுரை மாவட்டம் திருவேடகத்தில் 1949இல் பிறந்தவர். தொலைத்தொடர்புத் துறையில் 40 ஆண்டுகள் பணியாற்றி, 2008-ல் முதுநிலை மேற்பார்வையாளராகப் பணிநிறைவு பெற்றவர். தொழிற்சங்கத்தில் 50 ஆண்டுகள் கடந்து பொதுவாழ்க்கைப் பயணம் செய்தவர். தொழிற்சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியுள்ள இவர், தொலைத்தொடர்புத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தில் 16 ஆண்டுகள் மாநிலச்செயலாளராகப் பணியாற்றியுள்ளார். அகில இந்தியச் சங்கத்தில் பொருளாளர், துணைப்பொதுச் செயலாளர், மற்றும் அகில இந்தியச் செயல் தலைவர் பொறுப்புகளில் இருந்தவர். திராவிட இயக்க பற்றாளர்.. இந்தியாவில் 14 மாநிலங்களில் நடைபெற்றுள்ள அகில இந்திய மாநாடுகள், கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார்.* ■